IELTS என்பதன் விரிவாக்கம் International English Language Testing System என்பதாகும். இந்த ஆங்கில மொழித்தகமைக்கான பரீட்சை சா்வதேசரீதியில் அரசாங்கங்களாலும்,பல்கலைக்கழகங்கள் உட்பட்ட உயா்கல்வி நிறுவனங்கள் ,தனியாா் நிறுவனங்கள் என்பவற்றாலும் அங்கிகரிக்கப்பட்டதாகும்.

IELTS பரீட்சையில் சித்தி அல்லது தோல்வி என்ற அடிப்படையில் பெறுபேறுகள் வழுங்கப்படுவதில்லை. மொத்தமாக ஒன்பதற்கு இவ்வளவு என்ற அடிப்படயில் புள்ளிகள் வழுங்கப்படும். இது பான்ட் ஸ்கோா் எனப்படும்.

அடிப்படையில் IELTS பரீட்சையில் இரண்டு வகையான பரீட்சை வகைகள் உண்டு –

1) Academic IELTS
2) General IELTS.

கல்வியின் காரணமாக(Student Visas) வெளிநாடுகளுக்கு செல்லவிரும்புவா்கள் Academic IELTS பரீட்சைக்கும் குடியேற்ற விசா போன்ற ஏனைய விசாக்கள் மூலம் வெளிநாடுகளிற்கு செல்ல விரும்புவா்கள் General IELTS பரீட்சைக்கும் தோற்ற வேண்டும்.

இந்த பரீட்சைகள் இரண்டும் நான்கு கூறுகளை உள்ளடக்கியதாகும் -1)**எழுத்து திறன் பரீட்சை**(Writing) **2)வாசிப்புத்திறன் பரீட்சை** (Reading) 3)**பேச்சுத்திறன் பரீட்சை** (Speakng) 4)**கேள்திறன் பரீட்சை**(Listening)




அக்கடமிக் மற்றும் ஜெனரல் பரீட்சைகள் இரட்டிற்கும் வாசிப்பு மற்றும் எழுத்துப்பரீட்சைகள் மட்டுமே வேறுபட்டவை மற்றைய இரண்டு பகுதியுமே பொதுவானவை.

அக்கடமிக் பரீட்சையின் பெறுபேறுகளை சகலவிதமான தேவைகளுக்கும் பயன்படுத்தலாம்.

ஜெனரல் பரீட்சையின் பெறுபேறு குறிப்பிட்ட சில விசா வகைகளுக்கே பயன்படும்.

**-KU Education**
**www.kugroup.info**

## IELTS Band Score – புள்ளிகள்

மொத்தமாக ஒன்பது(09) புள்ளிகளுக்கே பரீட்சை பெறுபேறுகள் வழுங்கப்படும். பரீட்சைக்கு சமூகமளித்தாலே 1 புள்ளி வழுங்கப்படும்.( 1 Band Score).

## 5.5 ஐ.இ.எல்.ரி.எஸ் புள்ளிகள்

பல்கலைக்கழகங்கள்,கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் வேறு வேறு வகையான ஆகக்குறைந்த புள்ளிகளை மாணவர்களிடமிருந்தும் விசா விண்ணப்பிப்பவர்களிடமிருந்தும் எதிர்பார்ப்பர்.

உதாரணமாக ஐக்கிய இராச்சியத்தில் இலங்கை மாணவர்கள் ஆரம்ப நிலையிலான ஒரு பயிற்சி நெறியினை தொடர குறைந்தது 5.0-5.5 புள்ளிகள் பெற்றிருக்கவேண்டி இருக்கும். உதாரணமாக இரண்டு வருடங்களை கொண்ட ஒரு டிப்ளோமா (உதா: டிப்ளோமா இன் கம்பியூட்டர் ஸ்ரடீஸ்) கல்வி நெறிக்கு 5.5 புள்ளிகள் போதுமானதாகும் (சமயா சமயங்களில் மாறுபடலாம்)

## 4.5 ஆகக்குறைந்த புள்ளியா ? இதனை நான் பயன்படுத்தலாமா ?

ஆம். 4.5 என்பது இந்த பரீட்சையயைப்பொறுத்தவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு புள்ளி அல்ல.

ஆனால் சில சமயங்களில் 4.5 என்பது ஆங்கிலக் கல்வி ஒன்றை கற்பதற்கான அடிப்படை அறிவு இருக்கிறது என்று உங்களை நிறுவ பயன்படுமே தவிர ,குறுகிய கால ஆங்கிலக்கல்வி நெறி தவிர்ந்த வேறு நீண்ட கால கல்வி நெறிகளுக்கு பயன்படாது. ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மாணவர் விசா ஒன்றினைப்பெற உங்களுக்கு 4.5 என்பது போதுமானதல்ல.

## 6-6.5 புள்ளிகள்

இரண்டாவது மேற் பட்டப்படிப்பிற்கு(Post Graduate) விண்ணப்பிக்கும் பட்டதாரி மாணவர்கள் 6-6.5 மொத்தப் புள்ளிகளை இந்த பரீட்சையில் பெற்றிருத்தல் பெரும்பாலான கல்வி நிறுவனங்களால் எதிர்பார்க்கப்படும்.

முதலாவது பட்டப்படிப்பாயின் (Under Graduates) 5..5 போதுமானதாக இருக்கும்(சமயா சமயங்களில் மாறுபடலாம்)

## 7.00 புள்ளிகள்

அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் குடியேற (Migration) பொதுவாக மொத்தப்புள்ளிகளாக 7 இருத்தல் தற்போது தேவையான தகுதியாக இருக்கிறது.

ஆனால் வைத்தியர்கள் (MBBS மற்றும் அதன் வழி மேற்படிப்பு படித்தவர்கள்) தமது முது மாணி பட்டங்களிற்காக வெளிநாடுகளுக்கு செல்லும் போது அவர்கள் IELTS பரீட்சையில் ஒவ்வொரு பகுதியிலும்(மொத்தம் நான்கு பகுதிகள்-(Writing,Listening,Reading,Speaking) தனித்தனியே 7. புள்ளி பெறவேண்டியிருக்கிறது.

பல மாணவர்கள் IELTS பரீட்சை பற்றிய பூரண விழக்கமின்றி இருப்பதையும் அவர்கள் வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்யும் முகவர் நிறுவனங்கள் பலவற்றால் தவறாக வழிநடத்தப்படுவதையும் தினசரி சந்திக்கும் மாணவர்களிடமிருந்து அறிய முடிந்ததால் ஓரளவாவது விழிப்புணர்வை வழங்கவேண்டும் என்ற நோக்கிலேயே இந்த சிறிய கையேடு நொலேட்ஜ் யூனிவேர்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதில் வழங்கப்பட்டிருக்கும் புள்ளி பற்றிய தேவைகள் அவற்றை வினவும் நிறுவனங்களால் காலத்துக்கு காலம் மாற்றப்படும்.

## இது சாதாரண ஆங்கிலப்பரீட்சையில்லை.

சிறந்த ஆங்கில அறிவு மட்டும் இந்தப்பரீட்சையை அணுகப்போதுமானது அல்ல. பரீட்சையின்போது பொது அறிவு ,உலக அறிவு,புத்திக்கூர்மை என்பனவும் சமூக அக்கறை,மனிதாபிமானம் உட்பட்ட உயர் விழுமியங்கள் பற்றிய பரீட்சாதாரியின் எண்ணங்கள் பற்றியும் அறியப்படுகிறது. 7 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப்பெற இந்த விடயங்களை நிச்சறம் அறிந்திருக்க வேண்டும்.

இலங்கைப் பாடசாலைக்கல்வி முறையிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டிருப்பதால், மிகச்சிறந்த உலக அறிவு , ஆங்கிலப்புலமை சிந்தனை ஆற்றல் உள்ள மற்றும் முறையான பயிற்சி பெற்ற விரிவுரையாளர்களிடம் மட்டுமே போதிய வழிகாட்டலைப்பெற முடியும்.

## IELTS பரீட்சை பற்றிய இலவச விழக்கம்

IELTS பரீட்சை பற்றிய எந்த ஒரு விபரத்தையும் வேலை நாட்களில் பகல் நேரத்தில் மட்டும் 0777302882 என்ற இலக்கத்தை அழைத்து எமது விரிவுரையாளரை நேரில் சந்திக்கும் நேரத்தை பெற்று நேரில் அறிந்து கொள்ளலாம். இந்த சேவை முற்றிலும் இலவசமானதாகும். **முக்கிய குறிப்பு – பரீட்சை அமைப்பு பற்றிய விபரங்கள் நேரில் மட்டுமே வழங்கப்படும்** .தொலைபேசி இலக்கம் சந்திக்கும் நேரத்தை பெற மட்டுமே.

**IELTS பரீட்சை பதிவுகள்** - இலங்கையில் எந்த பிரிட்டிஷ் கவுன்சிலிலும் IELTS பரீட்சைக்கு தோற்ற கே.யு எடியுகேசன் யாழ் அலுவலகத்தில் பதிவு செய்யலாம். கே.யு IELTS பரீட்சைக்கான அங்கிகரிக்கப்ட்ட பரீட்சை பதிவு மையமாகும். பதிவின்போதே இலவசமாக பிரிட்டிஷ் கவுன்சிலால் வழங்கப்படும் வழிகாட்டி புத்தகத்தையும் சீடீ யையும் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக பரீட்சை வழிகாட்டி மற்றும் மாதிரி வினாத்தாள்களை முற்று முழுதாக கே.யுவின் ஒன்லைன் ஸ்ருடன்ற் போர்ட்டல் மூலமாக இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்(கே.யு வின் மாணவர்களுக்கு மட்டும்)**

**கே.யு வின் IELTS பரீட்சைக்கான ஆயத்த வகுப்புக்கள்(IELTS Preparation Classes)** - தனிப்பட்ட வகுப்புக்கள், உங்கள் வசதிக்கேற்ற வகுப்பு நேரம், வாராந்தம் இரண்டு வகுப்புக்கள். சுமார் ஒன்றரை மாதங்களில் பூர்த்தி. இலவச கையேடு மற்றும் சீ.டி, மாதிரிப்பரீட்சைகள். மிகச்சிறந்த பத்துவருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள பட்டதாரி விரிவுரையாளர்.

வைத்தியர்களிற்காக விசேட நேர ஒதுக்கீடு உண்டு .

**மல்ரி மீடியா புரஜெக்டர் – வீடியோ ,ஓடியோ வசதி கொண்ட நவீன வகுப்பறை.**





*Knowledge Universe*
*No 626,1/1,K.K.S Road,Jaffna | Tel : 0777302882*
*http://edu.kugroup.info Email: director@kugroup.infop*

*For more info about*
*IELTS at KU Education*
*http://edu.kugroup.info/ielts*